மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 31 செவ்வாய்க்கிழமை 13.06.2024 கதிர் 228




# நிபந்தனையின்றியே மூன்றாவது தவணைக் கடன் சர்வதேச நாணய நிதியம் எமக்கு வழங்கியுள்ளது!

## நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தகவல்!



**நிபந்தனையின்றியே சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது தவணைக் கடன் கொடுப்பனவிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.**

**சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான மூன்றாம் தவணைக் கடன் கொடுப்பனவு குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.**

**இது குறித்து நிதிராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க மேலும் கூறுகையில்,**

**2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட பணியாளர் மட்ட இணக்கப்பாட்டின் அடிப்படையில் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள நீடிக்கப்பட்ட கடன் வசதியின் மூன்றாவது தவணைக் கொடுப்பனவிற்கு சர்வதேச நாணய நிதியத்தின் நிறைவேற்றுக் குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது.**

2➤

# வாக்குகளை கருத்திற் கொண்டு சஜித் பிரேமதாச புலம்பெயர் தமிழர்களிடம் சரணடைந்துள்ளார்!

## பொதுஜன பெரமுனவின் காமினி லொக்குகே எம்.பி. தெரிவிப்பு



தேர்தல் வாக்குகளை கருத்திற் கொண்டு ஈழம்வாதிகளான புலம்பெயர் தமிழர்களிடம் சஜித் பிரேமதாச சரணடைந்துள்ளார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் தலைமையகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர்களுடனான சந்திப்பின் போது அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் காமினி லொக்குகே தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கருத்து தெரிவிக்கையில் "ஜனாதிபதி ஆர். பிரேமதாச வறிய மக்களுக்கு உதவினார். ஆனால், புலிகளுடன் சமாதானப் பேச்சு நடத்தச் சென்று நாட்டையே அழிவிற்கு கொண்டு சென்றார். அன்டன் பாலசிங்கம் கொழும்பிலுள்ள ஹோட்டல் ஒன்றில் தங்கவைக்கப்பட்டிருந்தார். இதற்கிடையில் அவர்களுக்கு ஆயுதங்கள் வழங்கப்பட்டன. பணமும் கொடுக்கப்பட்டது. ஆனால், அவரது அறிவில்லாதனத்தால் புலி உறுப்பினர் பாபுவின் வெடி குண்டிற்கு அவரும் பலியானார்.

2➤

# ஆசிரியர்கள் ரியூஷன் கட்டணங்களை குறைக்காதிருப்பது பெரும் அநீதியாகும்!

## மாணவர்களின் பெற்றோர் கவலை தெரிவிப்பு

ரூபாயின் மதிப்பு வலுப்பெற்று எரிபொருள், மின்சாரம், எரிவாயு உள்ளிட்ட பல பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் குறைக்கப்பட்டுள்ள போதிலும், வரையறையின்றி அதிகரிக்கப்பட்ட தனியார் வகுப்புப்பு கட்டணங்களை குறைப்பதற்கு தனியார் வகுப்பு ஆசிரியர்கள் முன்வராமையினால் அப்பாவி பிள்ளைகள் மற்றும் அவர்களின் பெற்றோர்கள் மிகுந்த சிரமத்தில் உள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடங்களில், நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்து, பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகள் அதிகரித்த போது, தனியார் வகுப்பு ஆசிரியர்கள் ரியூஷன் கட்டணங்களை பல மடங்கில் அதிகரித்திருந்தனர். எனினும், தற்போது நாட்டின் பொருளாதார

2➤

# பாதாள அறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 14 வயது சிறுமி பொலிஸாரால் பாதுகாப்பாக மீட்பு

பலவந்தமாகக் கடத்திச் செல்லப்பட்டு பாதாள அறை ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 14 வயது சிறுமியை புத்தல பொலிஸார் பாதுகாப்பாக மீட்டனர்.

அந்தச் சிறுமியை அவரது காதலன் என்று கூறப்படும் 20 வயது இளைஞர் கடத்திச் சென்றுள்ளார் என்று பொலிஸாரின் விசாரணையில் தெரியவந்தது.

புத்தல கட்டுகஹகல்கே பகுதியிலுள்ள வீடொன்றுக்கு வந்த மூன்று இளைஞர்கள், அங்கு உறங்கிக் கொண்டிருந்த 14 வயது சிறுமியைக் கடந்த 9 ஆம் திகதி இரவு கடத்திச் சென்றனர்.

கடத்தலைத் தடுக்க முயன்ற சிறுமியின் தந்தையின் கையை இளைஞர் ஒருவர் கூரிய ஆயுதத்தால் தாக்கியுள்ளார் என்று பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்நிலையில், சிறுமியின் தந்தை பொலிஸில் செய்த முறைப்பாட்டின் பிரகாரம் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேகநபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தின் உத்தரவுக்கு அமைய எதிர்வரும் 24ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

ஆனாலும், கடத்தப்பட்ட சிறுமியைக் கண்டுபிடிக்க முடியாமல் போயிருந்தது.

எவ்வாறாயினும், நீண்ட விசாரணையின் போது, பிரதான சந்தேகநபருடன் சிறுமியைக் கடத்த வந்த மற்ற இரு இளைஞர்களையும் பொலிஸாரால் கண்டுபிடிக்க முடிந்தது.

அதன்படி, இரு இளைஞர்களையும் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தியதில், கடத்தப்பட்ட சிறுமியை புத்தல புறநகர் பகுதியில் உள்ள பிரதான சந்தேகநபரின் மாமாவின் வீட்டின் பாதாள அறை ஒன்றில் அடைத்து வைத்திருந்தமை தெரியவந்தது.

இதனையடுத்து விரைந்து செயற்பட்ட பொலிஸார் குறித்த சிறுமியை மீட்டனர்.

சிறுமியை அடைத்து வைப்பதற்காகக் கடந்த ஒன்றரை மாதங்களுக்கு முன்னரே இந்த அறை தயார் செய்யப்பட்டுள்ளது என்று கூறப்படுகின்றது.

ஐந்து அடி உயரமும், ஆறு அடி அகலமும் கொண்ட இந்த அறை, காற்றோட்டத்துக்காக இரண்டு சிறிய துளைகள் மட்டுமே இருந்துள்ளன. மேலும், வீட்டின்

2➤




# அழகு சாதன தொழிற்சாலையில் இரசாயனம் விஷமாகி 30 பேர் வைத்தியசாலையில் அனுமதி!

பாணந்துறை பின்வத்த பிரதேசத்தில் உள்ள அழகுசாதன உற்பத்தி தொழிற்சாலையொன்றில் இரசாயனம் கலந்த விஷத்தினால் பாதிக்கப்பட்ட 30 ஊழியர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பாணந்துறை அடிப்படை வைத்தியசாலையின் பணிப்பாளர் மருத்துவர் தில்ருக்ஷி வீரசிங்ஹ தெரிவித்துள்ளார்.

மருத்துவமனையில் இருந்தவர்கள் தலைவலி, தலைச்சுற்றல், மூச்சு விடுவதில் சிரமம் ஆகியவற்றால் அவதிப்பட்டதாக கூறப்படுகிறது. வாசனைத் திரவியங்கள், முக அழகுசாதனப் பொருட்கள் போன்ற அழகுசாதனப் பொருட்களை உற்பத்தி செய்யும் நிறுவனமொன்றில் உற்பத்தி பணிகளின்போது இரசாயனப் பொருள் ஒன்றின் செறிவில் ஏற்பட்ட மாற்றத்தினால் இந்த விஷத்தன்மை ஏற்பட்டுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சுகயீனமுற்றோர் பாணந்துறை வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும் அவர்களில் நால்வர் ஆபத்தான நிலையில் உள்ளதாகவும், ஆனால் அடிப்படை சிகிச்சைகள் வழங்கப்பட்டதன் பின்னர் அவர்கள் வழமைக்கு திரும்பி வருவதாகவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் தெரிவித்தார்.

சம்பவம் பற்றி கேள்வியுற்ற பின்வத்த காவல் நிலையத்தினர் குறித்த தொழிற்சாலைக்கு சென்று அங்கிருந்த சுமார் 340 தொழிலாளர்களை அவர்களது வீடுகளுக்கு அனுபபியதுடன், தொழிற்சாலையை தற்காலிகமாக மூட நடவடிக்கை எடுத்தனர். சம்பவம் குறித்து பின்வத்தை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ரென-40)

# ஆசிரியர் பற்றாக்குறையை விரைவில் தீர்க்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுகிறது!

## கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த



மாகாண மட்டத்தில் நிலவுகின்ற ஆசிரியர் பற்றாக்குறையை விரைவில் தீர்க்க அரசாங்கம் அர்ப்பணிப்புடன் செயற்படுவதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

மாகாண ஆளுநர்களுடன் நேற்று (12) ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே கல்வி அமைச்சர் இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கூறுகையில், தேசியப் பாடசாலைகளுக்கு 2,500 புதிய ஆசிரியர் நியமனங்களை ஜூலை 3ஆம் திகதி வழங்குவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன்படி இரசாயனவியல், பௌதிகவியல், உயிரியல், கணிதம், தொழிநுட்பம், சர்வதேச மொழிகள் ஆகிய பாடங்களுக்கு 2,100 ஆசிரியர் நியமனங்களையும், 2021 ஆம் ஆண்டு நடைபெற்ற ஆங்கில மொழி மூல உயர் டிப்ளோமாப் பரீட்சைப் பெறுபேறுகளின் அடிப்படையில் 500 ஆசிரியர்களை நியமிக்கவும் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதன் மூலம் தேசிய பாடசாலைகளில் குறித்த பாடங்களுடன் தொடர்புடைய ஆசிரியர் வெற்றிடங்கள் பெருமளவில் நீங்கும், என்று அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன், ஆங்கில மொழிமூல ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் தற்போது ஓய்வு பெற்ற ஆங்கில மொழிமூல ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டு ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்டு வருவதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, கல்வி நிர்வாக சேவை மற்றும் ஆசிரியர் கல்விச் சேவை ஆகியவற்றில் உள்ள உத்தியோகத்தர் பற்றாக்குறையை ஈடுசெய்யும் வகையில் துரித வேலைத்திட்டம் ஒன்று அமுல்படுத்தப்பட்டு வருவதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (04)

# யாழ்ப்பாணத்தில் டெங்கு நுளம்பு பரவும் சூழல் மூவருக்கு எதிரான வழக்கில் தண்டம் அறவீடு!

யாழ்ப்பாணத்தில் டெங்கு நுளம்பு பரவும் சூழல் காணப்பட்டமை தொடர்பில் மூவருக்கு எதிராக நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கில் 4,500 ரூபாய் தண்டம் அறவிடப்பட்டுள்ளது.

இணுவில் மற்றும் தாவடிப் பகுதிகளில் கடந்த 8ஆம் திகதி இணுவில் பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் மேற்கொள்ளப்பட்ட டெங்கு தொடர்பிலான தொடர் பரிசோதனையின்போது, டெங்குக் குடம்பிகள் கண்டறியப்பட்ட இடங்கள் தொடர்பாக மூவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டது.

மல்லாகம் நீதவான் நீதிமன்றில் இன்றைய தினம் வியாழக்கிழமை குறித்த வழக்குகள் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வேளை, மூவரும் தம் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக்கொண்டதையடுத்து மூவரையும் எச்சரித்த மன்று, மூவருக்கும் 4,500 ரூபாய் தண்டம் அறவிட்டுள்ளது. (01)

# தமிழரசுக் கட்சிக்கு ஐ.தே.கவும் வலை?

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் ஐக்கிய மக்கள் சக்தி, தேசிய மக்கள் சக்தி என்பன பேச்சு நடத்தியுள்ள நிலையில், விரைவில் அக்கட்சியுடன் ஐக்கிய தேசியக் கட்சியும் பேச்சு நடத்தவுள்ளது.

ஜனாதிபதி தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு சிறுபான்மையினக் கட்சிகளின் ஆதரவை திரட்டும் பொறுப்பு அக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களான ரவி கருணாநாயக்க, வஜிர அபேவர்தன உள்ளிட்டவர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

எனவே, அவர்கள் தலைமையிலான குழுவொன்றே விரைவில் தமிழரசுக் கட்சியுடன் பேச்சு நடத்துவார்கள் எனத் தெரியவருகின்றது.

ஜனாதிபதித் தேர்தலில் களமிறங்கும் முடிவை எடுத்துள்ள ரணில் விக்கிரமசிங்க, அபிவிருத்திப் பணிகளுக்குத் தடங்கல் ஏற்படாமல் இருப்பதற்காக அது தொடர்பில் பகிரங்கமாக அறிவிக்காமல் உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (05)




## ஆசிரியர்கள் ரியூஷன் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலை ஓரளவு முன்னேற்றம் அடைந்துள்ள நிலையில், ரியூஷன் கட்டணங்களை தற்போதைய சூழலுக்கேற்ப குறைப்பதற்கு தனியார் வகுப்பு ஆசிரியர்கள் முன்வராதது பெரும் அநீதியாகும் என பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

“பிள்ளைகளின் தற்போதைய தனியார் வகுப்புக் கட்டணத்தை எங்களால் தாங்க முடியவில்லை. தனி யார் வகுப்புக் கட்டணங்கள் இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இருந்ததை விட மூன்று முதல் நான்கு மடங்கு உயர்த்தப்பட்டுள்ளன. அனைத்து பொருட்கள் மற்றும் சேவைகளின் விலை குறைக்கப்பட்டாலும், தனியார் வகுப்பு ஆசிரியர்கள் தங்கள் கட்டணத்தை குறைக்கவில்லை. எனவே, தனியார் வகுப்பு கட்டணத்தை குறைத்து அப்பாவி பிள்ளைகளுக்கு நியாயம் வழங்குமாறு ஆசிரியர்களை கேட்டுக்கொள்கின்றோம் “என பெற்றோர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரென-41)

## பாதாள அறையில் மறைத்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உரிமையாளரையும் பொலிஸார் கைது செய்தனர்.

சிறையில் இருந்து விடுவிக்கப்பட்ட சிறுமி மருத்துவ சிகிச்சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். மீட்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

## வாக்குகளை கருத்திற் கொண்டு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாளடைவில் போர் முடிவுக்கு வந்தது. ஆனால், புலம்பெயர் தமிழர்கள் இன்னும் இயங்குகின்றனர். அவர்கள் உலகெங்கிலும் இருந்தவாறு தமது நோக்கத்தை அடைவதற்காக செயற்பட்டு வருகின்றனர். சஜித் பிரேமதாச வாக்குகளை பெறும் நோக்கத்திற்காக அந்த புலம் பெயர் தமிழ் கும்பலிடம் சரணடைந்துள்ளார் போல் தெரிகின்றது. இதனையிட்டு நாங்கள் கவலையடைகின்றோம்.

நாட்டின் தலைவிதியை தீர்மானிக்கும் பிரச்சினைகள் பற்றி இன்னும் ஆழமாக சிந்திக்க வேண்டும். இல்லையென்றால் பாரிய பிரச்சினைகள் ஏற்படும். புலிகளுடனான சமாதான பேச்சுக்களின் போது புலிகள் நிலத்தடி வைத்தியசாலைகளை வைத்துள்ளதாகவும் அதில் எமது தென்னிலங்கை மக்களும் சிகிச்சை பெற முடியும் எனவும் ஆர். பிரேமதாச அன்று தெரிவித்திருந்தார். அந்த சமாதானப் பேச்சுக்கள் காரணமாக இராணுவமும் பொலிஸாரும் நிராயுதபாணிகளாக்கப்பட்டு இராணுவ முகாம்களில் அடைக்கப்பட்டனர். அந்த சந்தர்ப்பத்திலேயே 700 நிராயுதபாணி பொலிஸ் உத்தியோகத்தர்கள் புலிகளால் கொல்லப்பட்டனர். அந்த கொலையின் 34வது நினைவு தினமே இன்று அனுஷ்டிக்கப்படுகின்றது” என்றார். (ரென-39)

## நிபந்தனையின்றியே .........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணக்கப்பாட்டிற்கு வருமாறு கடன் வழங்குனர்கள் எமக்கு அழுத்தம் பிரயோகிக்கவில்லை. அதேபோல் சர்வதேச நாணய நிதியம் அதற்கு இடமளிக்கவும் இல்லை.

எந்தவொரு நிபந்தனையும் இன்றியே சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது தவணைக் கொடுப்பனவிற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

2023 டிசம்பர் மாதமளவில் சமூகச் செலவுகள் தவிர்ந்த ஏனைய இலக்குகளை போதுமான அளவில் பூர்த்தி செய்ய எம்மால் முடிந்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் மூன்றாவது கடன் தவணைக்கு அமைய இலங்கைக்கு 336 மில்லியன் அமெரிக்க டொலர் கிடைக்கப்பெறவுள்ளது, என்று தெரிவித்துள்ளார். (04)




உங்கள் பிரதேசத்து
நிகழ்வுகள் பற்றிய
விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# அமெரிக்க Evan Pugh பல்கலைப் பேராசிரியராக பேராசிரியர் சுரேஷ் கனகராஜாவுக்கு கௌரவம்

அமெரிக்காவில் அமைந்துள்ள Penn State பல்கலைக்கழகத்தில் பிரயோக மொழியியல், ஆங்கிலம், மற்றும் ஆசிய கற்கைகளில் Edwin Erle Sparks பேராசிரியராக விளங்கும் சுரேஷ் கனகராஜா அவர்கள் ஜுலை முதல் Evan Pugh பல்கலைக்கழக பேராசிரியராக கௌரவிக்கப்பட்டுள்ளார்.

Penn State பல்கலைக்கழகத்தின் முதல் தலைவரான இவான் பியு நினைவாக 1960 இல் நிறுவப்பட்டதில் இருந்து 79 ஆசிரிய உறுப்பினர்கள் மட்டுமே இந்தச் சிறப்பைப் பெற்றுள்ளனர்.

அந்த வகையில், இந்த ஆண்டுக்குரிய சிறப்பைப் பெற்ற ஐந்து பல்கலைக்கழக ஆசிரிய உறுப்பினர்களில் கனகராஜாவும் ஒருவராவார்.

ஆராய்ச்சி மற்றும் ஆக்கபூர்வமான செயல்பாடுகளில் தேசிய மற்றும் சர்வதேசரீதியில் அங்கீகரிக்கப்பட்ட கல்வியியலாளர்கள், கற்பித்தல், ஆராய்ச்சி அல்லது படைப்பாற்றல் மற்றும் சேவைகள் தொடர்பாக பல்கலைக்கழகத்தின் தரத்தை உயர்த்துவதில் குறிப்பிடத்தக்க பங்களிப்பு மற்றும் தலைமைத்துவத்தை நிரூபித்தல், தங்கள் துறைகளில் தனித்துவத்தை அடையும் இளங்கலை மற்றும் பட்டதாரி மாணவர்களுடன் சிறந்த கற்பித்தல் திறன்களை வெளிப்படுத்துதல், அவர்களின் துறைகளில் தலைவர்களாக இருக்கும் சக ஊழியர்களிடமிருந்து ஆதரவைப் பெற்று தங்கள் துறைகளில் மிளிர்வோருக்கு இப்பட்டம் வழங்கி சிறப்பிக்கப்படுகிறது.

உலகப் புகழ்பெற்ற சமூகமொழியியல் வல்லுனரான சுரேஷ் கனகராஜா, உலகளாவிய ரீதியில் தகவல் தொடர்புகளில் மொழிப் பன்முகத்தன்மையில் கவனம் செலுத்தும் அதேவேளை அவரது ஆய்வுகள் பெரும்பாலும் இலங்கையின் பன்மொழித்துவத்தையும் உள்ளூர் மயமாக்கபட்ட ஆங்கிலத்தையும் (Sri Lankan English) மையமாகக் கொண்டு இருந்தன.

சமீபத்தில், கனகராஜா மாற்றுத்திறனாளிகள் மற்றும் நரம்பியல் வேறுபாடு கொண்டவர்களின் தகவல் தொடர்புகளில் மொழியற்ற வளங்கள் வகிக்கும் பங்கை ஆய்வு செய்தார். இவருக்கு College of Education ஆசிரிய உறுப்பினரான ஜோசப் வாலண்டேவுடன் இணைந்து ஆராய்ச்சி நடத்த வாய்ப்பு கிடைத்தது.

மேலும், அவர் கடந்த பல ஆண்டுகளாக சர்வதேச விஞ்ஞானிகள் தங்கள் ஆராய்ச்சி மற்றும் தொழில்முறை நடவடிக்கைகளில் ஒருவருக்கொருவர் எவ்வாறு தொடர்பு கொள்கிறார்கள் என்பதை ஸ்டெம் துறைகளைப் பயன்படுத்தி ஆராய்ச்சியை வழிநடத்தினார். ஆராய்ச்சியாளர்கள் வெவ்வேறு நாடுகளிலிருந்தும் மொழிக் குழுக்களிலிருந்தும் வந்தாலும், தகவல் தொடர்பு முறிவுகள் இல்லாமல் ஒன்றாகச் செயல்படுவதற்கான வழிகளைக் கண்டறிந்துள்ளனர்.

“அவர்கள் ஒரு குழு நெறிமுறை மற்றும் கூட்டு மனப்பான்மையைக் கொண்டு வருகிறார்கள். இது, அவர்களின் வெவ்வேறு பாணிகள் மற்றும் ஆங்கில விதிமுறைகளைத் தீர்க்க உதவுகிறது” என்று பேராசிரியர் சுரேஷ் கனகராஜா கூறினார்.

மற்ற பாராட்டுக்களுடன், TESOL international "TESOL துறையில் வடிவமைத்த சிறந்த 50 அறிஞர்களில் (வேறு மொழிகளைப் பேசுபவர்களுக்கு ஆங்கிலம் கற்பித்தல்) கனகராஜா அங்கீகரிக்கப்பட்டார். மேலும் எல்சேவியர் தரவுக் களஞ்சியத்தால் உலகின் முதல் வீத இடங்களில் பட்டியலிடப்பட்டார்.

அமெரிக்காவின் ஸ்டான்போர்ட் பல்கலைக்கழகம் வெளியிட்டுள்ள ஆய்வு வெளியீடுகளின் மேற்கோள்களின் (citations) சமீபத்திய தரவரிசையில் உலகின் சிறந்த முதல் பத்து மொழியியலாளர்களுக்குள் பேராசிரியர் சுரேஷ். கனகராஜா இடம் பிடித்துள்ளார்.

அவர் கடந்த ஆண்டு நீண்டவாழ்க்கை மேற்கோள்களின் (career-long citations) அடிப்படையில் 10 ஆம் இடத்தையும், ஒரு வருடத்தில்மேற்கொள்ளப்பட்ட மேற்கோள்களில் 9 ஆம் இடத்தையும்பெற்றார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அவர் 15 புத்தகங்கள் மற்றும் பல கட்டுரைகளை எழுதியுள்ளார் அல்லது திருத்தியுள்ளார், அவற்றில் பல ”சிறந்த புத்தகம்” அல்லது ”சிறந்த வெளியீடு” விருதுகளை நவீன மொழி சங்கம், அமெரிக்க பயன்பாட்டு மொழியியல் சங்கம் (AAAL) மற்றும் பிரித்தானிய பயன்பாட்டு மொழியியல் சங்கம் ஆகியவற்றிலிருந்து பெற்றுள்ளன. அவர் யுயுயுடு இன் சிறப்புமிக்க உதவித்தொகை மற்றும் சேவை விருதை கடந்த காலத்தில் பெற்றவர் மற்றும் 2011 முதல் 2012 வரை அதன் தலைவராக பணியாற்றினார்.

2008 ஆம் ஆண்டில், கனகராஜா, புலம்பெயர்ந்த சமூகங்கள் தொடர்பான தகவல் தொடர்பு, அடையாளம் மற்றும் கல்வி தொடர்பான அழுத்தமான பிரச்சினைகளை ஆராய சமூக அறிவியல் மற்றும் மனிதநேயங்களில் உள்ள பல்வேறு துறைகளைச் சேர்ந்த பட்டதாரி மாணவர்கள் மற்றும் ஆசிரிய உறுப்பினர்களை ஒன்றிணைக்கும் ஒரு புலமைத்துவக் குழுவான இடம்பெயர்வு ஆய்வுத் திட்டத்தை (Migration Studies Project) நிறுவினார். அந்த வேலை, தோராயமாக 10 ஆய்வுக் கட்டுரைகள், மூன்று புத்தகங்கள், நான்கு சிறப்பு தலைப்பு இதழ்கள் மற்றும் பல ஆய்வுக் கட்டுரைகளுக்கு வழிவகுத்தது.



பென்சில்வேனியாவில் பாரம்பரிய மொழிகளைக் கற்பிப்பதில் ஆர்வமுள்ள புலம்பெயர்ந்த சமூகங்களுக்கு இலவச ஆசிரியர் பயிற்சியையும் இக்குழு வழங்கியுள்ளது.

இவ்வளவு சிறப்புக்களையும் பெருமைகளையும் கொண்ட இவர், 1984 ஆம் ஆண்டு யாழ் பல்கலைக்கழகத்தில் தனது ஆசிரியப் பணியைத் தொடங்கி 1994 ஆம் ஆண்டு வரை ஆங்கில மொழி கற்பித்தல் துறையில் விரிவுரையாளராகவும் துறைத்தலைவராகவும் இருந்தார்.

1985 முதல் 1990 வரை அமெரிக்காவில் கலாநிதிப் பட்டத்தை முடித்த பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்திற்குத் திரும்பினார்.

மேலும் இவரது ஆரம்ப கால ஆய்வுகள் 1993 இல் யாழ்ப்பாணத்தில் போர்ச் சூழல் நிலவிய காலகட்டத்தில் யாழ்ப்பாணத்தில் இருந்தே சர்வதேச ஆய்வு வெளியீடுகளுக்குச் சமர்பிக்கப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கிளிநொச்சியில் குளவிக்கொட்டுக்கு இலக்கான 20 மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி

*கிளிநொச்சி தர்மபுரம் மத்திய கல்லூரியில் குளவிக் கொட்டுக்கு இலக்கான 20 மாணவர்கள் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.*

*அதிக காற்று வீசி வரும் நிலையில் இன்று குளவிக்கூடு கலைந்துள்ளது. இதனால் மாணவர்களைக் குளவிகள் தாக்கியுள்ளன.*

*குளவிக் கொட்டுக்கு இலக்கான மாணவர்கள் தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். (05)*




# சஜித் கருத்துக்கு எதிராக கொழும்பில் போராட்டம்!



கொழும்பு, ஜுன் 13

13ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்தப் போவதாக யாழ்ப்பாணத்தில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்திருந்த கருத்தானது நாடளாவிய ரீதியில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில் அவர் தெரிவித்த கருத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்திற்கு முன்பாக இன்று போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் இலங்கை பிரிவினைக்கு எதிரான கூட்டமைப்பு, தேசிய அமைப்புகளின் ஒற்றுமை, தேசப்பற்றுள்ள தேசியப் படை, இரண்டாம் தலைமுறை, யாழ். சிவில் சமூக மையம், அகில இலங்கை அமைப்பு, பிரஜை அதிகாரத்திற்கு எதிரான இலஞ்சம் மற்றும் ஊழல் அமைப்பு, பூகோள இலங்கை சங்கம், நீதி மற்றும் இறைமைக்கான மக்கள் குரல், தேசப்பற்றுள்ள அறிஞர் சங்கம் என்பன கலந்து கொண்டன.

இதன்போது எதிர்க்கட்சித் தலைவர் அவரது அலுவலகத்தில் இல்லாததால் அலுவலகப் பிரதிநிதி ஒருவரிடம் போராட்டக்காரர்கள் கடிதம் ஒன்றைக் கையளித்தனர். (04)

# நியூசிலாந்தை வீழ்த்திய மேற்கிந்தியத் தீவுகள் ரி-20 உலகக்கிண்ண சூப்பர் 8க்குள் நுழைந்தது!

ரி-20 உலகக் கிண்ணத் தொடரில் சூப்பர் 8 சுற்றுக்கு மேற்கிந்தியத் தீவுகள் அணி தகுதி பெற்றுக்கொண்டது.

இன்று இடம்பெற்ற நியூசிலாந்து அணிக்கு எதிரான போட்டியில் வெற்றியீட்டியதன் ஊடாக மேற்கிந்திய தீவுகள் அணி சூப்பர் 8 வாய்ப்பை உறுதி செய்து கொண்டது. மேற்கிந்தியத் தீவுகளின் டிரினிடாட்டில் இன்று நடைபெற்ற இந்தப் போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது.

அதன்படி, முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட மேற்கிந்தியத் தீவுகள் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழப்பிற்கு 149 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. மேற்கிந்தியத் தீவுகள் அணி சார்பில் ருதபோர்ட் 68 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டார்.



நியூசிலாந்து அணியின் ட்ரென்ட் போல்ட் 3 விக்கெட்டுக்களையும், டிம் சௌதி, லோகி பெர்குசன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

150 ஓட்டங்களை வெற்றி இலக்காக கொண்டு பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய நியூசிலாந்து அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 136 ஓட்டங்களையே பெற்று 13 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

நியூசிலாந்து அணி சார்பில் கிளென் பிலிப்ஸ் 40 ஓட்டங்களையும், மிட்செல் சான்ட்னர் ஆட்டமிழக்காமல் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொண்டனர்.

மேற்கிந்தியத் தீவுகள் அணியின் அல்சாரி ஜோசப் 4 விக்கெட்டுக்களையும், குடாகேஷ் மோடி 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

இந்தப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணி வெற்றியீட்டியதோடு, ரி-20 உலகக் கிண்ணத் தொடரின் சூப்பர் 8 சுற்றுக்குத் தகுதியும் பெற்றுக்கொண்டது. போட்டியின் ஆட்ட நாயகனாக மேற்கிந்தியத் தீவுகள் அணியின் ருதபோர்ட் தெரிவு செய்யப்பட்டார்.

நியூசிலாந்து அணி, தொடரில் இதுவரை பங்குபற்றிய இரண்டு போட்டிகளிலும் தோல்வியடைந்து 'சி' குழுவின் புள்ளிப்பட்டியலில் இறுதி இடத்திலுள்ளது. இதன் காரணமாக நியூசிலாந்து அணிக்கு சூப்பர் 8 சுற்றுக்கு தகுதி பெறுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே காணப்படுகின்றன.

'சி' குழுவில் மேற்கிந்தியத் தீவுகள் அணி 6 புள்ளிகளுடன் முதலிடத்திலும், ஆப்கானிஸ்தான் அணி 4 புள்ளிகளுடன் 2 ஆம் இடத்திலும், உகாண்டா அணி 2 புள்ளிகளுடன் 3 ஆம் இடத்திலும் உள்ளன. (04)

# ரணில் இல்லாவிட்டால் மீண்டும் வரிசை யுகம்!

## நிதி இராஜாங்க அமைச்சர் மிரட்டல்

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெற வேண்டியது காலத்தின் கட்டாய தேவை என்றும், அவ்வாறு இல்லாவிட்டால் நாட்டில் மீண்டும் வரிசை யுகம் ஏற்படக்கூடும் என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஜனாதிபதித் தேர்தலின்போது ரணில் விக்கிரமசிங்கவுக்குப் பதிலாக பிறிதொரு வேட்பாளரை ஆதரிப்பதற்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி தீர்மானித்தால் தங்களின் முடிவு எவ்வாறு அமையும் என எழுப்பப்பட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசியக் கட்சியினதோ அல்லது ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியினதோ வேட்பாளராக வரமாட்டார். மக்கள் வேட்பாளராகவே களமிறங்குவார். கட்சி ரீதியாகப் பிளவுபட்டு தேர்தலை எதிர்கொள்ளும் நிலையில் இன்று நாடு இல்லை. பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியிடம் நாட்டை மீட்பதற்குரிய வேலைத்திட்டம் இல்லை. தேசிய மக்கள் சக்தியிடமும் இல்லை.

எனவே, ஜனாதிபதித் தேர்தலின்போது நாட்டை அழிவு திசையை நோக்கி கொண்டு செல்லும் முடிவை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சி எடுக்காது என நம்புகின்றேன். இந்த நாட்டை மேலும் ஐந்தாண்டுகளுக்கு ரணில் விக்கிரமசிங்க ஆள வேண்டும்.

இந்த அரசில் உள்ள பங்காளிக் கட்சிகள் தமது அடையாளத்தையும் பாதுகாத்துக்கொண்டே செயற்படுகின்றன. ஜனாதிபதி அதற்கு ஒருபோதும் இடையூறு ஏற்படுத்தியது கிடையாது. எனவே, ரணில்தான் அடுத்த ஜனாதிபதியாக வேண்டும் என்பதே எனது நிலைப்பாடாகும்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சிக்குள் உள்ள பெரும்பாலானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்க வேண்டும் என்ற முடிவிலேயே உள்ளனர்" - என்றார். (05)

# வடக்கு மக்கள் சஜித் பக்கமே

## திஸ்ஸ கூறுகின்றார்


வடக்கில் உள்ள வாக்குகளில் 70 சதவீதம் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கே கிடைக்கப்பெறும் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளர் திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"தமிழ் முற்போக்குக் கூட்டணி ஐக்கிய மக்கள் சக்தியுடன் கூட்டணி அமைத்துள்ளது. எனினும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எந்தவொரு பிரதான கட்சியுடனும் கூட்டணி அமைக்கவில்லை.

ஜனாதிபதித் தேர்தலின்போது வடக்கில் உள்ள வாக்குகளும் தீர்மானமிக்கதாக அமையும். வடக்கில் உள்ள தமிழ்க் கட்சிகளுடன் ஐக்கிய மக்கள் சக்திக்கு சிறந்த நல்லுறவு உள்ளது. வடக்கில் உள்ள தமிழ்ப் பிரதிநிதிகளில் பெரும்பாலானவர்கள் சஜித்துக்குச் சார்பான நிலைப்பாட்டில் உள்ளனர்.

குறிப்பாக வடக்கில் உள்ள வாக்குகளில் 70 முதல் 75 சதவீத வாக்குகள் ஐக்கிய மக்கள் சக்திக்கே கிடைக்கப்பெறும்.



முன்னர்தான் வடக்கில் கட்டளையின் பிரகாரமும், அழுத்தங்களின் பிரகாரமும் வாக்களிக்கப்படும். தற்போது அவ்வாறானதொரு சூழ்நிலை இல்லை. வடக்கு அரசியல் களமும் மாற்றம் கண்டுள்ளது" - என்றார். (05)

# மின்சார கட்டணம் அதிகரிக்கப்பட்டமைக்கு எதிரான மனு தொடர்பிலான விசாரணைகள் ஜூலை 7 இல்!

பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முறையான அனுமதியின்றி கடந்த வருடம் இரண்டாவது தடவையாக மின்சாரக் கட்டணத்தை உயர்த்த இலங்கை மின்சார சபை எடுத்த தீர்மானத்தின் மூலம் தாம் உட்பட நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனுவில் குறிப்பிட்டுள்ள காரணிகளை உறுதிப்படுத்துவதற்காக அடுத்த மாதம் 11 ஆம் திகதி விசாரணைகளை மேற்கொள்ள உச்சநீதிமன்றம் நேற்று (12) உத்தரவிட்டது.

இந்த மனு நேற்று நீதியரசர்களான ப்ரீத்தி பத்மன் சூரசேன, ஜனக் டி சில்வா மற்றும் மஹிந்த சமயவர்தன ஆகியோர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. தாம் பொதுப் பயன்பாட்டு ஆணைக்குழுவின் முன்னாள் தலைவராக அல்லாமல் தானும் ஒரு மின்சார நுகர்வோர் என்ற அடிப்படையிலும் மற்றும் பொதுநலன் கொண்ட நபர் என்ற ரீதியிலுமே இந்த மனுவை தாக்கல் செய்திருப்பதாக மனுதாரர் ஜனக ரத்நாயக்க உச்ச நீதிமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

அநீதியான முறையில் மேற்கொள்ளப்பட்ட மின் கட்டண அதிகரிப்பால் நாட்டு மக்கள் குறிப்பாக 1 அலகிலிருந்து 90 அலகு வரை மின்சாரத்தைப் பயன்படுத்தும் மக்கள் பெரும் பாதிப்பை எதிர்கொள்வதாக சட்டத்தரணி மொஹான் பாலேந்திரா ஊடாகத் தாக்கல் செய்த இந்த மனுவில் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்துள்ளார். (ரென-42)

# சகல மக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் யுகத்தை எமது ஆட்சியில் உருவாக்கியே தீருவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் சூளுரை




“அரசமைப்புச் சட்டம் குறித்து பல அரசியல்வாதிகள் பெரிதாகப் பேசி வரும் இக்காலத்தில், வெறும் கைவாறுகளுடன் சுருங்கிக்கொள்ளாமல், மக்கள் ஆணையால் உருவாகும் ஐக்கிய மக்கள் சக்தி அரசில் கல்வி, சுகாதாரம், பொருளாதாரம், சமூக, கலாச்சார, மத உரிமைகள் போன்ற உரிமைகளும் மனித உரிமைகள் அத்தியாயத்தில் சேர்க்கப்பட்டு, 220 இலட்சம் மக்களினதும் உரிமைகள் பாதுகாக்கப்படும் யுகத்தை உருவாக்குவோம்.” - என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

“எமது நாட்டின் அரசமைப்பில் அடிப்படை உரிமைகளுக்கான தனியான உள்ளடக்க அத்தியாயம் ஒன்று உள்ளது. இந்த அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் சிவில் மற்றும் அரசியல் உரிமைகளே உள்ளடங்கியுள்ளன. பொருளாதாரம், சமூகம், கலாசாரம், மதம், கல்வி, சுகாதாரம் ஆகிய அம்சங்கள் இதில் உள்ளடக்கப்படவில்லை.” - என்றும் அவர் குறிப்பிட்டார்.

பிரபஞ்சம் பஸ் வழங்கும் வேலைத்திட்டத்தின் கீழ், 88 ஆவது கட்டமாக 50 இலட்சம் ரூபா பெறுமதியான பஸ், யாழ்ப்பாணம், சுழிபுரம் விக்டோரியா கல்லூரிக்கும் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று இடம்பெற்றது. இதன்போது, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினருக்கு ஒரு இலட்சம் ரூபா நிதியுதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

இவ்வாறு, பாடசாலைகளுக்கு பஸ்களை வழங்கி வைக்கும் போது, ‘பஸ் மேன்’ என்று இழிவுபடுத்தி, சேறு பூசி, விமர்சிக்கும் பொறாமை கொண்ட ஓர் கூட்டத்தினரும் இந்த வங்குரோத்து நாட்டில் இருந்து வருகின்றனர். இவ்வாறான பஸ்களை வழங்கும்போது தம்மை விமர்சிப்பதை விடுத்து, தமக்குப் போட்டியாக மக்களுக்காக சேவை செய்ய முன்வருமாறே அத்தகையவர்களுக்குக் கூற வேண்டியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

மேலும், 76 ஆண்டுகால வரலாற்றில் எதிர்க்கட்சியாக இருந்து, எந்த அரசியல் கட்சியும் செய்யாத பணியை ஐக்கிய மக்கள் சக்தி செய்து வருகின்றது. இந்நாட்டு எதிர்க்கட்சி அரசியலுக்கு ஐக்கிய மக்கள் சக்தி புதிய கற்பிதங்களைப் போதித்து வருகின்றது. இந்தச் சேவையைக் கண்டு பார்த்துக் கொண்டிருக்க முடியாத கைவாறு அடிக்கும் குழுவொன்று இதனை விமர்சித்து வருகின்றது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் மேலும் தெரிவித்தார்.

# முன்னர் வன்முறை அரசியலில் ஈடுபட்ட குழுக்கள் மீண்டும் அவற்றில் ஈடுபடாது என நம்ப முடியாது!

## முன்னாள் பொலிஸ் மா அதிபர் சந்திர பெர்னாண்டோ

கடந்த காலங்களில் வன்முறை அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட அரசியல் குழுக்கள் மீண்டும் அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடாது என நம்ப முடியாது!, என முன்னாள் பொலிஸ் மா அதிபர் சந்திர பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர்கள் மற்றும் முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் கலந்து கொண்ட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் சந்திப்பு இன்று காலை புறக்கோட்டையில் உள்ள தனியார் விடுதியில் இடம்பெற்றது.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த முன்னாள் பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ, 1971 ஆம் ஆண்டு கிளர்ச்சிக்குப் பிறகு, அரசாங்கம் ஒரு பெரிய மறுவாழ்வை ஏற்படுத்தியது. கலகம் இத்துடன் முடிந்துவிடும் என்று அனைவரும் நினைத்தோம். ஆனால் துரதிஷ்டவசமாக 1989 இல் மீண்டும் இந்த வன்முறைச் செயல் இலங்கையில் இடம்பெற்று உடைமைகளும் உயிர்களும் அழிக்கப்பட்டன.

அப்போதும் இந்த வன்முறைச் செயல் நின்றுவிடும் என்று நினைத்தோம். ஆனால் துரதிர்ஷ்டவசமாக, மே 9, 2022 அன்று, ஒரே இரவில் 91 வீடுகளை அழிக்கும் அளவுக்கு ஒரு குழு அமைக்கப்பட்டது இப்போது கண்டறியப்பட்டுள்ளது.

எனவே, இதுபோன்ற செயல்களைச் செய்யும்போது, எதிர்காலத்தில் இதைச் செய்ய மாட்டார்கள் என என்ன நிச்சயம்?, என கேள்வி எழுப்பியுள்ளார். (04)

# சட்டவிரோதமாக மீன்பிடியில் ஈடுபட்ட 16 பேர் சிக்கினார்கள்

யாழ். வடமராட்சி கிழக்கு, கட்டைக்காட்டில் சட்டவிரோதமாக ஒளி பாய்ச்சி மீன்பிடியில் ஈடுபட்ட 16 பேர் 8 படகுகளுடன் நேற்று கைது செய்யப்பட்டனர்.

வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான கடற்பகுதியில் சட்டவிரோத தொழில்களான அட்டை பிடித்தல், ஒளிப்பாய்ச்சி மீன் பிடித்தல் போன்ற நடவடிக்கைகள் தீவிரமாகியுள்ளதால் சிறு தொழிலாளிகள் தொடர் முறைப்பாடுகளை செய்து வருகின்றனர்.

கட்டைக்காட்டில் இருந்து நேற்று ஐம்பதுக்கும் அதிகமான படகுகளில் சென்று ஒளிபாய்ச்சி மீன்பிடித்து பல்லாயிரக்கணக்கான மீன்களோடு கரைக்கு வந்து கொண்டிருந்த வேளை 8 படகுகளுடன் குறித்த 16 பேரும் வெற்றிலைக்கேணி கடற்படையால் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்டவர்கள் மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் கடற்றொழில் பரிசோதகரிடம் ஒப்படைக்கப்பட்டதுடன் கைது செய்யப்பட்ட சிலரை கடற்படை கடலில் வைத்து விடுவித்துள்ளனர் என்று நேரில் பார்த்த தொழிலாளிகள் குற்றஞ்சாட்டியதுடன் விடுதலை செய்யப்பட்டவர்கள் துணிவாக இன்றும் சட்டவிரோத மீன்பிடிக்குச் சென்றுள்ளனர் எனவும், அவர்கள் இலஞ்சம் கொடுத்து தொழில் புரிகின்றனர் என்றும் தெரிவித்தனர். (05)

# அமெரிக்க வெள்ளத்தில் இலங்கை அணி சிக்கியது!

அமெரிக்காவின் புளோரிடா பகுதியில் ஏற்பட்டுள்ள வெள்ளப்பெருக்கு காரணமாக இலங்கை கிரிக்கெட் அணியும் பாதிக்கப்பட்டுள்ளது.

அதன்படி இன்று மேற்கிந்தியத் தீவுகளுக்குச் செல்லவிருந்த இலங்கை அணி வெள்ளம் மற்றும் மழை காரணமாக புளோரிடாவில் இருந்து வெளியேற முடியாமல் போனதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போதைய வானிலை காரணமாக பல விமானங்கள் ரத்துச் செய்யப்பட்டுள்ளதால், இலங்கை அணி நாளைமேற்கிந்திய தீவுகளுக்குப் பயணிக்க உள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இலங்கை அணி ஆரம்பச் சுற்றில் பங்கேற்கும் இறுதிப் போட்டி வரும் 17 ஆம் திகதி நெதர்லாந்துக்கு எதிராக செயின்ட் லூசியாவில் நடைபெறவுள்ளது.



# நாளொன்றுக்கு ரூபா 500 க்கும் குறைவாக உழைப்பவர்களே ஏழ்மையான வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் என கணிப்பீடு!

## ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் அறிவிப்பு

தற்போதைய உலகளாவிய பொருளாதார மதிப்பீட்டுக்கு அமைய, ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டங்களின்படி, நாளொன்றுக்கு 1.5 டொலருக்கும் (சுமார் 500 ரூபாய்) குறைவாக உழைப்பவர்கள் மிகவும் ஏழ்மையான பிரிவைச் சேர்ந்தவர்கள் என கணிப்பிடப்பட்டுள்ளது.

நிலையான உலகளாவிய அபிவிருத்தி தொடர்பான வேலைத்திட்டத்தை தயாரிப்பதற்கான சமீபத்திய பிரேரணையிலேயே இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களின் எதிர்காலத்திற்கான தேசிய திட்டத்தை தயாரிப்பதற்கான இரண்டு நாள் செயலமர்வின் இறுதி நாள் அமர்வின்போது கொழும்பு கலதாரி ஹோட்டலில் இந்த பிரேரணை முன்வைக்கப்பட்டது.

ஐரோப்பிய ஒன்றியத்திற்கான இலங்கை மற்றும் மாலைதீவுகள் ஆகிய நாடுகளுக்கான தூதுவர் கெமரூன் மொரேனோ தலைமையில் இந்த அமர்வு இடம் பெற்றது. அங்கு வெளியிடப்பட்ட பிரேரணையின்படி, 2030 ஆம் ஆண்டுக்குள், வறுமை மற்றும் பாதிக்கப்படக்கூடிய மக்களை வலுப்படுத்தவும், குறைந்த பட்சம் அபிவிருத்தி அடைந்த நாடுகள் மற்றும் வளர்முக நாடுகளில் வறுமையை ஒழித்தலை இது நோக்கமாக கொண்டுள்ளது. மேலும், 2025 ஆம் ஆண்டளவில் 05 வயதிற்குட்பட்ட குழந்தைகளின் வளர்ச்சி குன்றிய தன்மை மற்றும் வீண்விரயம் தொடர்பிலும் சர்வதேச அளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட இலக்குகளை அடைவதையும் இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

இந்த திட்டத்தில், வறுமை ஒழிப்பு, பட்டினி ஒழிப்பு, ஆரோக்கியமான வாழ்க்கை, தரமான கல்வி, பாலின சமத்துவம், அனைவருக்கும் குடிநீர், நவீன ஆற்றல், ஓர் அமைதியான சமுதாயத்தை உருவாக்குதல், நகரங்கள் மற்றும் குடியிருப்புகளின் மேம்பாடு, பருவநிலை மாற்றம் மற்றும் அதன் விளைவுகளுக்கு எதிராக நிற்பது உள்ளிட்ட 17 இலக்குகளை அடைவதே இந்த பிரேரணையின் நோக்கம் என ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி வேலைத்திட்டம் தெரிவித்துள்ளது. (ரென-38)

# அச்சுவேலியில் ஊடகவியலாளரின் வீட்டின்மீது மர்மக் கும்பல் தாக்குதல்!



யாழ்ப்பாணம் - அச்சுவேலிப் பகுதியைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவரின் வீட்டின் மீது வன்முறைக் கும்பல் புகுந்து தாக்குதல் மேற்கொண்டுள்ளதுடன், வீட்டின் முன் நிறுத்தி வைக்கப்பட்டு இருந்த வாகனங்களுக்கும் தீ வைத்து வன்முறையில் ஈடுபட்டுள்ளது.

அச்சுவேலி, பத்தமேனி காளி கோவில் பகுதியில் உள்ள ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீட்டினுள் இன்றைய தினம் வியாழக்கிழமை அதிகாலை 12.15 மணியளவில், இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஐவர் அடங்கிய வன்முறைக் கும்பல் கூரிய ஆயுதங்களுடன் அத்துமீறி நுழைந்து, தாக்குதலை மேற்கொண்டுள்ளது.

வீட்டின் ஜன்னல் கண்ணாடிகள், மீன் தொட்டி போன்றவற்றை அடித்து உடைத்து, வீட்டின் வரவேற்பறையில் வைக்கப்பட்டிருந்த பொருட்களுக்கும் தீ வைத்துள்ளனர்.

பின்னர் வீட்டின் வெளியே நின்ற ஊடகவியலாளரின் மோட்டார் சைக்கிளுக்கும் , அவரது சகோதரனின் முச்சக்கரவண்டி மீதும் கூரிய ஆயுதங்களால் தாக்குதல் மேற்கொண்ட பின்னர் அவற்றிற்கும் தீ வைத்துள்ளனர்.

அதனால் மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி என்பன சேதமடைந்துள்ளன.

"திருநங்கைளின் உணர்வுகளைத் தவறாகச் சித்தரிக்காதே" என அச்சடிக்கப்பட்ட துண்டுப்பிரசுரங்களை வீட்டினுள் வீசி விட்டு குறித்த கும்பல் தப்பிச் சென்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக அச்சுவேலிப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.






## இளைஞர்கள் மத்தியில் வன்முறை தூண்டப்படுவதிலிருந்து தடுத்தல்

### செயற்திட்டத்தின் ஆறாவது நிகழ்ச்சி



காரைதீவு பிரதேச செயலாளர் திருமதி.ராகுலநாயகி சஜிந்ரனின் வழிகாட்டலில் ஜிஏஎப்எஸ்ஓ தன்னார்வ தொண்டு நிறுவனத்தின் அனுசரணையில், காரைதீவு பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர் நெறிப்படுத்தலில் பிரதேச இளைஞர் சேவைகள் மன்ற உறுப்பினர்களை வலுப்படுத்தல் எனும் தொனிப்பொருளுக்கமைவாக ூஇளைஞர்கள் மத்தியில் வன்முறை மற்றும் தீவிரவாதப் போக்குச் சிந்தனைகள் தூண்டப்படுவதிலிருந்து தடுத்தல்ூ எனும் கருப்பொருளிலான செயற்திட்டத்தின் ஆறாவது நிகழ்ச்சி இடம்பெற்றது.

இளைஞர்களிடையே வன்முறை தீவிரவாதத்தை தடுக்க போதைப் பொருள் தடுப்பு - எனும் தலைப்பிலான விரிவுரையானது தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டு அதிகார சபையின் வடகிழக்கு மாகாண ஒருங்கிணைப்பாளர் எம்.எம்.ஜீ.பீ.எம். றஷாட்டினால் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் நிகழ்த்தப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் காரைதீவு பிரதேச செயலக அனர்த்த நிவாரண சேவைகள் அபிவிருத்தி உத்தியோகத்தர், உளவளத்துணை உத்தியோகத்தர், இளைஞர் சேவைகள் உத்தியோகத்தர் மற்றும் ஜிஏஎப்எஸ்ஓ இன் மாவட்ட செயற்திட்ட ஒருங்கிணைப்பாளர் ஆகியோர்கள் கலந்து கொண்டனர்.

## அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரோடு சந்திப்பு

(சர்ஜூன் லாபீர்)

அம்பாறை மாவட்ட புதிய மேலதிக அரசாங்க அதிபர் எஸ்.ஜெயராஜன் அவர்களுக்கும்,அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத்திற்கும் இடையிலான சிநேகபூர்வ சந்திப்பு இன்று அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் தொழிற்சங்கத் தலைவர் கபீர் கலீல் தலைமையில் இடம்பெற்ற இந் சந்திப்பில் அமைப்பின் செயலாளர்எம்.அருஸ்இஹ்லாஸ் மாவட்ட இணைப்பாளர் எல்.எம் சர்ஜ/ன், பிரதேச இணைப்பாளர் ஏ.சி பர்ஹான் ஆகியோர் கலந்து கொண்டனர்

இச் சந்திப்பில் மாவட்டத்தில் அமுல்படுத்தப்படவிருக்கும் எதிர்கால அரச திட்டங்களில் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் வகி பாகம் மற்றும் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எதிர்நோக்கும் சவால்கள் போன்ற பல்வேறு விடயங்கள் கலந்தாலோசிக்கப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.


JRIDE
BEYOND THE ROAD
Safety and comfort are our concern
ஜேரைட்
JRIDE
TAXI APP FROM JAFFNA
இலங்கை முழுவதும் | Islandwide
DOWNLOAD PASSENGER APP:
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
jride
JRide - Beyond the Road
JRide Driver: Drive & Deliver
இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் பயணத்தை தொடங்கலாம்!
YOU CAN EASILY REGISTER & BOOK YOUR RIDE
Google Play
App Store
வாகன உரிமையாளர்களே ஓட்டுனர்களே!
உங்கள் தனிப்பட்ட மற்றும் வாடகை வாகனங்களை பயன்படுத்தி உங்கள் வருமானத்தை அதிகரிக்க ஒரு தீர்வு!
இதுவரை பதிவு செய்யாதவர்கள் JRide Driver செயலியில் இலகு முறையில் கணக்கை பதிவு செய்து உங்கள் சேவையை தொடங்கலாம்!
DOWNLOAD DRIVER APP:
YOU CAN EASILY REGISTER & ADD YOUR VEHICLE
Google Play
App Store
SCHEDULED BOOKING
New Feature
புதிய வசதி
நீண்ட தூர பயணத்திற்கு வாகனத்தினை முன்பதாகவே புக்செய்து வைக்க விரும்புகின்றீர்களா?
விமான நிலையத்திற்கு / விமான நிலையத்தில் இருந்து வாகனம் தேவையா?
எமக்கு அழையுங்கள்; தொலைபேசி ஊடாகவோ; WhatsApp மூலமாகவோ தொடர்பு கொள்ளவும்.
HOTLINE : 706563213 / 703563213
JRIDE TAXI APP
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk
மகிழ்ச்சியான பயணம் திருப்தியான கட்டணம்!